# கல்வி அமைச்சு

## உயர் கல்விப் பிரிவு

## விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் மனித வளங்கள் அபிவிருத்திக் கருத்திட்டம்

கல்வி அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படும் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப மனித வளங்கள் அபிவிருத்திக் கருத் திட்டத்தில் (STHRDP) நிலவும் கீழே குறிப்பிடப்படும் பதவிக்காக தகைமை பெற்ற இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணங்கள் கோரப்படுகின்றன. இந்தக் கருத்திட்டத்திற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) நிதியுதவி வழங்குவதுடன் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்திற்கு அனைத்து வசதிகளையும் கொண்ட பொறியியல் பீடமொன்றும் களணி, இலங்கை சப்ரகமுவ மற்றும் ரஜரட்ட ஆகிய பல்கலைக்கழகங்களுக்கு மூன்று தொழில்நுட்ப பீடங்கள் நிர்மாணிக்கப்படவுள்ளன. இந்தத் திட்டத்தின் மொத்தப் பெறுமதி சுமார் 165 மில்லியன் அமெரிக்க டொலர் ஆகும். திட்டத்தின் காலப் பகுதி 2018 முதல் 2024 வரையாகும்.

| **பதவி** | **பதவிகளின் எண்ணிக்கை** | **சம்பள அளவுத் திட்டம்** | **நிறுவகம்** |
|---|---|---|---|
| பெறுகை அலுவல்கள் நிபுணர் | 01 | PS3 | கருத்திட்ட முகாமைத்துவப் பிரிவு (PMU) |

மேலே குறிப்பிடப்பட்ட பதவிக்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்குத் தேவையான அடிப்படைத் தகைமைகள் மற்றும் பொதுவான நிபந்தனைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

**தேவையான தகைமைகள்**

**01. பெறுகை அலுவல்கள் நிபுணர் - PS3**

**கீழே (i) அல்லது (ii) அல்லது (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள மிகக் குறைந்த தகைமைகள் மற்றும் அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்:**

(i) குறித்த விடயம் சார்ந்த துறை சம்பந்தமாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஆரம்ப (இளமாணி) பட்டத்தைப் பெற்றிருத்தல்

**அல்லது**

குறித்த விடயம் சார்ந்த துறையின் பட்டத்திற்கு சமமான தகைமை என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமையொன்றைப் பெற்றிருத்தல்.

**அல்லது**

குறித்த விடயம் சார்ந்த துறை சம்பந்தமாக அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட இணை உறுப்புரிமை (Associate Membership) / அதற்கு சமமான தொழில் தகைமையைப் பெற்றிருத்தல்

**அத்துடன்**

முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தது 12 வருட கால தகைமைகளுக்குப் பின்னரான அனுபவத்தைப் பெற்றிருத்தல்

(ii) குறித்த விடயம் சார்ந்த துறை சம்பந்தமாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஆரம்ப (இளமாணி) பட்டத்தைப் பெற்றிருத்தல்

**அல்லது**

குறித்த விடயம் சார்ந்த துறையின் பட்டத்திற்கு சமமான தகைமை என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமையொன்றைப் பெற்றிருத்தல்.

**அல்லது**

குறித்த விடயம் சார்ந்த துறை சம்பந்தமாக அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட இணை உறுப்புரிமை (Associate Membership) / அதற்கு சமமான தொழில் தகைமையைப் பெற்றிருத்தல்

**மற்றும்**

குறித்த விடயம் சார்ந்த துறை சம்பந்தமாக பெற்றுக்கொண்ட முதுமாணிப் பட்டமொன்றை அல்லது குறித்த விடயம் சார்ந்த துறை சம்பந்தமாக அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனமொன்றில் பூரண உறுப்புரிமை / பட்டய உறுப்புரிமை அல்லது சமமான தொழில் தகைமையைப் பெற்றிருத்தல்

**அத்துடன்**

முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தது 09 வருட கால தகைமைகளுக்குப் பின்னரான அனுபவத்தைப் பெற்றிருத்தல்

(iii) அரசாங்க நாடளாவிய சேவையொன்றின் தரம் I உத்தியோகத்தராக இருத்தல் அல்லது குறித்த துறையில் அதற்கு இணையான பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தராக இருத்தல்.

**அத்துடன்**

தரம் I உத்தியோகத்தராக குறைந்தது 04 வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**பொதுவான நிபந்தனைகள்**

சகல விண்ணப்பதாரிகளும் பதவிக்கு ஏற்புடைய அனைத்து தகைமைகளையும் விண்ணப்பம் கோரப்படும் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்திருத்தல் கட்டாயமாகும்.

1. **வயதெல்லை** :

   விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 64 வயதிலும் குறைவாக இருத்தல் வேண்டும்.

2. **சம்பளம்** :

   முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2019.03.05 ஆம் திகதிய 01/2019 ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் ஏற்புடைய திருத்தங்களுக்கமைய உரிய சம்பளம் மற்றும் ஏனைய படிகள்.

3. **சேவை நிபந்தனைகள்** :

   உத்தியோகத்தர்கள் ஒரு (01) வருட கால ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்படுவார்கள். செயலாற்றுகை மற்றும் சேவையின் தேவைப்பாட்டிற்கமைய அந்தக் காலத்தை வருடா

வருடம் மேலும் மூன்று (03) வருட காலம் வரை நீடித்தல் சம்பந்தமாக கவனத்திற்கொள்ளப்படும்.

**4. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி :**

2021 யூலை 31

5. **ஏனைய அனுகூலங்கள்** :

ஊழியர் சேமலாப நிதியத்திற்காக ஊழியரிடமிருந்து 8% பங்களிப்புத் தொகையும், தொழில் வழங்குனரிடமிருந்து 12% பங்களிப்புத் தொகையும், ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்காக தொழில் வழங்குனரிடமிருந்து 3% பங்களிப்புத் தொகையும் அறவிடப்படும்.

தகைமைகள், அனுபவம் மற்றும் ஏனைய தகவல்கள் சம்பந்தமான முழு விபரங்களையும் உள்ளடக்கி விண்ணப்பதாரி சம்பந்தமான தகவல்களை வினவ முடியுமான உறவினர் அல்லாத இருவரின் பெயர்களுடன் தம்மால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை விண்ணப்ப முடிவு திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு கீழ் குறிப்பிடப்படும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது நேரடியாக கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும்.

**கருத்திட்டப் பணிப்பாளர்,**
**விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப மனித வளங்கள் அபிவிருத்திக் கருத்திட்டம்**
**கலி அமைச்சு**
**363 E, கொரகஹகந்த வீதி,**
**தலங்கம வடக்கு,**
**கொஸ்வத்த,**
**பத்தரமுல்லை.**

**செயலாளர்,**
**கல்வி அமைச்சு.**
**2021.07.15**